**அக்டோபர் – 30**

# TNPSC துளிகள்

- ❖ கர்நாடகாவின் விஜயநகரத்தில் உள்ள தரோஜி சோம்பல் கரடி சரணாலயம் அருகே பட்டைக்கழுத்து செவி ஆந்தையானது முதன்முதலில் தென்பட்டது.
- ❖ உலகளாவிய மோதல்களுக்கு மத்தியில் உலக அமைதி, இரக்கம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக பூடானின் திம்புவில் உலகளாவிய அமைதி பிரார்த்தனை விழா (GPPF) நடத்தப்படுகிறது.
- ❖ பத்மஸ்ரீ விருது பெற்ற பியூஷ் பாண்டே விளம்பர ஜாம்பவான் அவரது 70 வது வயதில் காலமானார்.
- ❖ இந்தியத் தலைமை நீதிபதி B.R. கவாய், உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான சூர்ய காந்தை அவருக்கு அடுத்தப்படியாக பதவி வகிப்பவராகவும், இந்தியாவின் 53வது தலைமை நீதிபதியாகவும் பரிந்துரைத்தார்.
- ❖ நிங்கோல் சகௌபா என்ற விழாவானது மெய்தே நாட்காட்டியில், முதன்மையாக மணிப்பூரில், ஒவ்வோர் ஆண்டும் ஹியாங்கேயின் சந்திர மாதத்தின் இரண்டாவது நாளில் கொண்டாடப்படுகிறது.
  - ○ இந்த விழாவில் திருமணமான பெண்கள் தங்கள் பெற்றோர் வீடுகளுக்கு விருந்திற்கு அழைக்கப்படுகிறார்கள் என்பதால் நிங்கோல் என்றால் 'திருமணமான பெண்' என்றும், சகௌபா என்றால் 'விருந்துக்கான அழைப்பு' என்றும் பொருள்படும்.
- ❖ 2025 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் ஆனது அக்டோபர் 27 முதல் நவம்பர் 02 ஆம் தேதி வரை "Vigilance: Our Shared Responsibility" என்ற கருத்துருவுடன் அனுசரிக்கப்படும்.
- ❖ 1892 ஆம் ஆண்டு பாரிஸில் சார்லஸ்-எமிலி ரெய்னாட் முதன்முதலில் இயங்குபட (அசைவூட்டப் படம்) நிகழ்ச்சியை நிகழ்த்தியதை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 28ம் தேதியன்று சர்வதேச இயங்குபடங்கள் தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## வழி செலுத்தலுக்கான விரிவான தரநிலைகள்


- ❖ இந்தியச் செயற்கைக்கோள் திரள் மூலமான வழி செலுத்தல் (NavIC) தரவு பெறும் அமைப்புகளுக்கான விரிவான தரநிலைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இஸ்ரோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட NavIC, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் செயற்கைக்கோள் வழிசெலுத்தல் அமைப்பாகும், இது பிராந்திய துல்லியத்தை உறுதி செய்கிறது.
- ❖ NavIC மூலம் இயக்கப்பட்ட சாதனங்களில் சமிஞ்ஞை தரம், நிலை நிறுத்துதல் துல்லியம் மற்றும் நேர துல்லியத்திற்கான வழிகாட்டுதல்களை இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) வெளியிட்டது.
- ❖ NavIC ஆனது L1, L5 மற்றும் S கற்றைகளில் சீர்நிலை நிலை நிறுத்தல் சேவை (SPS) சமிக்ஞைகளை வழங்குகிறது என்பதோடு, இது 1.5 மீட்டர் துல்லியம் மற்றும் 50-நானோ வினாடி நேர துல்லியத்தை உறுதி செய்கிறது.
- ❖ NavIC இரண்டு நிலை சேவைகளை வழங்கும் என்ற நிலையில், இதில் "நிலையான

நிலைப்படுத்தல் சேவை" என்பது பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்திருக்கும் என்பதோடு "கட்டுப்படுத்தப் பட்ட சேவை" (குறியாக்கப்பட்ட ஒன்று) என்பது அங்கீகரிக்கப்பட்ட பயனர்களுக்கு (இராணுவம் உட்பட) பயன்படும்.

- NavIC தொழில்நுட்பத்தை தரப்படுத்துவதன் மூலம், இந்தியா அதன் சொந்த செயற்கைக் கோள் வழிசெலுத்தல் அமைப்பை இயக்குவதில் அமெரிக்கா (GPS), ஐரோப்பிய ஒன்றியம் (கலிலியோ), ரஷ்யா (GLONASS) மற்றும் சீனா (BeiDou) போன்ற உலகளாவிய சக்திகளுடன் இணைகிறது.
- அமெரிக்கப் பாதுகாப்புத் துறையால் கட்டுப்படுத்தப்படும் GPS போலல்லாமல், NavIC இந்தியாவில் உள்ள குடிமை அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிறது.




## வரி இல்லாத சுங்கக் கட்டண முன்னுரிமைத் திட்டம்




- இந்தியாவின் வரி இல்லாத சுங்கக் கட்டண முன்னுரிமைத் திட்டம் (DFTP) ஆனது 2008

ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

- இது குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு (LDCs) இந்தியச் சந்தையில் முன்னுரிமை அணுகலை வழங்குகிறது.
- இந்தத் திட்டமானது, பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பது, ஏற்றுமதிகளை பல்வகைப் படுத்துவது மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 48 LDC நாடுகளுடன் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- வரி இல்லாத சுங்க அணுகலுக்குத் தகுதியான தயாரிப்புகளில் வேளாண் பொருட்கள், ஜவுளி, கைவினைப் பொருட்கள், தோல் பொருட்கள் மற்றும் கனிமங்கள் ஆகியவை அடங்கும்.

## சிறப்புப் பிரச்சாரம் 5.0




- சிறப்புப் பிரச்சாரம் 5.0 ஆனது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறை தீர்வுத் துறையை முதன்மைத் துறையாகக் கொண்டு இந்திய அரசாங்கத்தினால் தொடங்கப் பட்டது.
- இந்தப் பிரச்சாரம் ஆனது, நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் தூய்மைப் பிரச்சாரங்களை மிகவும் நன்கு நிறுவனமயமாக்குவதையும் நிலுவையில் உள்ளதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று நிலவரப் படி, 4.95 லட்சம் தூய்மைப் பிரச்சாரத் தளங்கள் சுவச்சதா (தூய்மை) பிரச்சாரத்தின் கீழ் சுத்தம் செய்யப்பட்டன.
- அமைச்சகங்களும் துறைகளும் 130.54 லட்சம் சதுர அடி அலுவலக இடத்தைத் தூய்மை செய்து, குப்பை அகற்றல் மூலம் 377.8 கோடி ரூபாய் வருவாயைப் பெற்றன.
- மொத்தம் 5.45 லட்சம் பொதுக் குறை தீர்வு வழக்குகள் தீர்க்கப்பட்டன என்பதோடு மேலும் 17.48 லட்சம் நேரடி கோப்புகள் மறு மதிப்பாய்வு செய்யப்பட்டன என்ற நிலையில், அவற்றில் 7.25 லட்சம் கோப்புகள் நீக்கப்பட்டன.
- இந்தப் பிரச்சாரம் ஆனது 12.99 லட்சம் மின்னணு கோப்புகளை மதிப்பாய்வு செய்து, 13,000க்கும் மேற்பட்ட ட்வீட்கள், 200 இன்போ கிராபிக்ஸ் (தகவல் வரைகலை) மற்றும் 36.7 மில்லியன் மக்களை சென்றடைந்ததன் மூலம் குறிப்பிடத்தக்க சமூக ஊடக ஈர்ப்பைப் பெற்றது.

## VOPPA ஆணை 2025

- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம் ஆனது 2011

ஆம் ஆண்டு தாவர எண்ணெய் பொருட்கள், உற்பத்தி மற்றும் கிடைக்கும் தன்மை (ஒழுங்குமுறை) ஆணையைத் திருத்தியுள்ளது.

- திருத்தப்பட்ட VOPPA ஆணை, 2025 ஆனது, அனைத்து சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள், பதப்படுத்தும் நிறுவனங்கள், கலவை நிறுவனங்கள், மறு சிப்பமிடும் நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கான பதிவை கட்டாயமாக்குகிறது.
- மாதாந்திர உற்பத்தி மற்றும் இருப்பு அறிக்கைகளை தற்போது நியமிக்கப்பட்ட இயங்கலை தளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
- சமையல் எண்ணெய் துறையின் ஒழுங்குமுறை மேற்பார்வை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிகழ்நேரக் கண்காணிப்பை மேம்படுத்துவதே இந்தத் திருத்தத்தின் நோக்கம் ஆகும்.
- திருத்தப்பட்ட உத்தரவைப் பின்பற்றாதது VOPPA ஆணை மற்றும் 2008 ஆம் ஆண்டு புள்ளி விவரச் சேகரிப்புச் சட்டத்தின் கீழ் விதி மீறலாகக் கருதப்படும்.




## அருணாங்க் திட்டம்




- அருணாங்க் திட்டம் என்பது அருணாச்சலப் பிரதேசத்தில் உத்தி சார் சாலை மேம்பாட்டிற்கான எல்லை சாலைகள் அமைப்பின் (BRO) முன்னெடுப்பாகும்.

- இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ் 696 கி.மீ.க்கும் அதிகமான மோட்டார் வாகன சாலைகளும் 1.18 கி.மீ. பெரிய பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக 278 கி.மீ. நீளமுள்ள ஹபோலி–சார்லி–ஹுரி சாலை பிட்டுமினஸ் (நிலக்கீல்) பூச்சினால் பூசப்பட்டுள்ளது.

### சொத்தாகக் கருதப்படும் இணைய சங்கேதப் பணம்




- இந்தியச் சட்டத்தின் கீழ் இணைய சங்கேதப் பணம் சொத்தாகக் கருதப்படுகிறது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இணைய சங்கேதப் பணம் அடையாளம் காணக் கூடியவை, மாற்றத்தக்கவை மற்றும் தனிப்பட்ட விசைக் குறியீடுகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன என்று நீதிமன்றம் விளக்கியது.
- இணைய சங்கேதப் பணங்களை மற்ற வகையான சொத்துக்களைப் போலவே சொந்தமாகவும் நம்பிக்கையுடனும் வைத்திருக்க முடியும்.
- சான்மாய் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்கும் வாசிர்எக்ஸ் எக்ஸ்சேஞ்ச் மீதான இணையவெளித் தாக்குதலுக்குப் பிறகு இந்த வழக்கு எழுந்தது.
- முதலீட்டாளரின் XRP நாணயங்கள் முடக்கத்தில் திருடப்பட்ட Ethereum குறியீடுகளில் இருந்து தனித்தனியாகவே இருந்தன என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 2(47A), இணைய சங்கேதப் பணங்களை மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களாக அங்கீகரிக்கிறது.

## சர்வதேசச் செய்திகள்

### COP10 மாநாட்டின் துணைத் தலைமை - இந்தியா

- பாரிஸில் உள்ள யுனெஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில்

ஊக்கமருந்துப் பயன்பாட்டிற்கு எதிரான உடன்படிக்கையின் பங்குதாரர்கள் மாநாட்டின் (COP10) 10வது அமர்வில் இந்தியா பங்கேற்றது.

- 2025–2027 ஆம் ஆண்டிற்கான ஆசிய-பசிபிக் குழுவிற்கான (குழு IV) COP10 வாரியத்தின் துணைத் தலைமை பொறுப்பிற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- விளையாட்டுப் போட்டிகளில் நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதற்காக விளையாட்டுகள் மூலம் விழுமியக் கல்வி (VETS) அணுகுமுறையை ஒருங்கிணைக்க இந்தியா சில திருத்தங்களை முன்மொழிந்தது.




## KL அமைதி ஒப்பந்தம்




- தாய்லாந்து மற்றும் கம்போடியா தங்கள் எல்லை மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக KL அமைதி ஒப்பந்தம் என்ற கூட்டு அறிவிப்பில் கையெழுத்திட்டுள்ளன.
- மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 47வது தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் (ASEAN) உச்சி மாநாட்டின் போது இது கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தமானது விரோதங்களை நிறுத்துதல், சர்ச்சைக்குரிய எல்லையில்

அமைதியை மீட்டெடுப்பது மற்றும் பிராந்திய உறுதித்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அமைதி ஒப்பந்தத்துடன், கம்போடியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் மற்றும் தாய்லாந்துடனான முக்கியமான கனிம ஒப்பந்தம் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

# பொருளாதாரச் செய்திகள்

## பரஸ்பர நிதி மூலம் பணம் செலுத்துதல்





- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது தற்போது பயனர்கள் குறுகிய கால பரஸ்பர நிதி இருப்புகளைப் பயன்படுத்தி நேரடியாக பணம் செலுத்த அனுமதிக்கிறது.
- பயனர்கள் தங்கள் பரஸ்பர நிதிக் கணக்குகளை தங்கள் UPI அடையாள எண்ணுடன் (ID) இணைத்து, பணம் செலுத்துதலின் போது இந்தப் புதிய கட்டண விருப்பத் தேர்வினைத் தேர்வு செய்யலாம்.
- வங்கிக் கணக்கில் வரவு வைக்க வேண்டிய அவசியமின்றி, பரஸ்பர நிதியிலிருந்து பணம் உடனடியாகக் கழிக்கப்படுகிறது.
- இந்த அம்சம் இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) ஒழுங்கு படுத்தப் படுகிறது மற்றும் UPI அமைப்பின் பாதுகாப்பான அமைப்புடன் இது நன்கு ஒருங்கிணைக்கப் படுகிறது.
- மேலும் விரிவுபடுத்துவதற்கானத் திட்டங்களுடன் தற்போது, இது தேர்ந்தெடுக்கப் பட்ட வணிகர்கள், இயங்கலை தளங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைக் கட்டணங்களைச் செலுத்த அனுமதிக்கப்படுகிறது.

## இந்தியாவில் வறுமை

- 2014 ஆம் ஆண்டில், இரங்கராஜன் குழுவானது வறுமைக் கோட்டினை (வரம்பினை) கிராமப்புறங்களுக்கு மாதத்திற்கு 972 ரூபாயாகவும், நகர்ப்புறங்களுக்கு மாதத்திற்கு 1,407 ரூபாயாகவும் நிர்ணயித்தது.
- 2014 ஆம் ஆண்டில் இந்த அளவீட்டின்படி சுமார் 29.5 சதவீத இந்தியர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தனர்.
- 2022–23 ஆம் ஆண்டிற்கான வீட்டு நுகர்வு செலவினக் கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்தி 20 முக்கிய மாநிலங்களுக்கான வறுமை சார்ந்த மதிப்பீடுகளை இந்திய ரிசர்வ் வங்கி புதுப்பித்தது.
- ஒடிசாவில் கிராமப்புற வறுமையானது 47.8 சதவீதத்திலிருந்து 8.6 சதவீதமாகவும்,

பீகாரில் நகர்ப்புற வறுமை 50.8 சதவீதத்திலிருந்து 9.1 சதவீதமாகவும் குறைந்துள்ளது.

- ஊட்டச்சத்து, பள்ளிப்படிப்பு, சுகாதாரம், மின்சாரம் மற்றும் வங்கிக் கணக்குகள் உள்ளிட்ட 12 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி அரசாங்கம் தற்போது பல பரிமாண வறுமையை அளவிடுகிறது.
- இந்தியாவில் 2013–14 ஆம் ஆண்டில் 29.17 சதவீதமாக இருந்த பல பரிமாண வறுமை ஆனது 2022–23 ஆம் ஆண்டில் 11.28 சதவீதமாகக் குறைந்துள்ளது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### நானோமீட்டர் மையச் செயலகம்




- மேம்பட்ட குறைக்கடத்தி வடிவமைப்புத் துறையில் நுழைவதைக் குறிக்கும் வகையில்,

இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 7-நானோமீட்டர் மையச் செயலகத்தினை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

- திறந்த மூல RISC-V கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட SHAKTI முன்னெடுப்பின் கீழ் மதராசின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினால், இந்தச் செயலி உருவாக்கப்படுகிறது.
- இந்த முன்னெடுப்பானது, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தால் வழி நடத்தப்படுகிறது மற்றும் ஆரம்பம் முதல் இறுதிக் கட்ட குறைக் கடத்தி உற்பத்தித் திறன்களை உருவாக்க இந்தியக் குறைக் கடத்தி திட்டத்துடன் ஒருங்கி அமைகிறது.
- இது நிதி, தகவல் தொடர்பு, பாதுகாப்பு, 5G, செயற்கை நுண்ணறிவு மற்றும் மீக்கணினி ஆகியவற்றில் உயர் செயல்திறன், ஆற்றல் செயல்திறன் கொண்ட பயன்பாடுகளை இலக்காகக் கொண்டுள்ளது.


## புரேவெஸ்ட்னிக் எறிகணை




- ரஷ்யா தனது அணுசக்தியால் இயங்கும் புரேவெஸ்ட்னிக் (9M730) சீர்வேக எறிகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இந்த எறிகணையானது 15 மணி நேரத்திற்குள் 14,000 கிமீ (8,700 மைல்கள்) தொலைவு வரை பறந்தது.
- NATO அமைப்பினால் SSC-X-9 ஸ்கைஃபால் என்றும் அழைக்கப்படும் இந்த எறிகணை கிட்டத் தட்ட வரம்பற்ற தாக்குதல் வரம்பையும் கணிக்க முடியாத பறத்தல் பாதையையும் கொண்டதாகக் கூறப்படுகிறது.
- இந்த எறிகணை தற்போதைய அல்லது எதிர்கால எறிகணை பாதுகாப்பு அமைப்புகளையும் துளைத்து தாக்கும் திறன் கொண்டது.
- இந்தச் சோதனையுடன் ரஷ்யாவின் நிலம், கடல் மற்றும் வான்வழி அணுசக்தித்

தயார்நிலையை நிரூபிக்கும் விதமாக ஓர் அணுசக்திப் பயிற்சியும் நடைபெற்றது.

### ஜெல்லிமீன் வடிவ உயிரியளமைப்பினை ஒத்த தானியங்கிகள்



- கடலடி ரேடாருக்குப் புலப்படாத வகையிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஒரு வெளிப்படையான, ஜெல்லிமீன் வடிவ உயிரியளமைப்பினை ஒத்தத் தானியங்கிகள் / பயோனிக் ரோபோவை சீனா உருவாக்கியுள்ளது.
- இந்தச் சாதனம் மென்மையான ஹைட்ரோஜெல் மற்றும் குறைந்த ஆற்றல் கொண்ட இயக்கிகளைப் பயன்படுத்தி ஜெல்லிமீன் இயக்கங்களைப் பிரதிபலிப்பதால், இது அமைதியான இயக்கத்தினைச் செயல்படுத்துகிறது.
- இதில் ஒரு செயற்கை நுண்ணறிவு சில்லு மற்றும் ஓர் ஒளிப்படக் கருவிப் பொருத்தப் பட்டுள்ளது என்பதோடு மேலும் இது கடல்வாழ் உயிரினங்களைக் கண்காணிக்கவும், நீருக்கடியில் உள்ள பொருட்களை அடையாளம் காணவும் கூடியது.
- 120 மி.மீ, 56 கிராம் எடை கொண்ட இந்த ரோபோ குறைந்தபட்ச ஆற்றல் மற்றும் இடையூறுடன் இயங்குவதால், நீண்ட காலக் கண்காணிப்புக்கு ஏற்றதாக அமைகிறது.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### பிரேசிலில் காபி தோட்டங்களினால் ஏற்படும் காடழிப்பு

- "Wake Up and Smell the Deforestation: Coffee’s Destruction of Brazilian Forests and its Future" என்ற அறிக்கையானது காபி வாட்ச் என்ற காபி உற்பத்தியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களின் மீது கவனம் செலுத்தும் ஓர் இலாப நோக்கற்ற அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- 2001 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பிரேசிலின் அட்லாண்டிக் காடுகளில் 312,803 ஹெக்டேர் பரப்பிலான காடுகளின் இழப்புக்கு காபி சாகுபடி நேரடி காரணமாக அமைந்தது.
- அட்லாண்டிக் காடுகள் ஒரு காலத்தில் சுமார் 1.2 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பில் பரவியிருந்தது ஆனால் இன்று அது 10 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.
- பிரேசில் உலகின் காபியில் சுமார் 40 சதவீதத்தை வழங்குகிறது ஆனால் காடுகள்

இழப்பு இந்தத் தொழில்துறையின் நீண்டகால நம்பகத் தன்மையை அச்சுறுத்துகிறது.

- ஈரப்பதத்தைச் சிறப்பாகத் தக்க வைத்துக் கொள்கிறது என்றாலும் காபி சாகுபடி பகுதிகளில் 1 சதவீதத்திற்கும் குறைவான வேளாண் சார் காடுகள் பயன்படுத்தப் படுகின்றன என்பதோடு மேலும் பிரேசிலின் அரபிகா நிலத்தில் மூன்றில் இரண்டு பங்கு 2050 ஆம் ஆண்டில் இழக்கப்படலாம்.




## மாநிலச் செய்திகள்

### மாபெரும் பசுமைச் சுவர் முன்னெடுப்பு




- ஆந்திரப் பிரதேச மாநிலமானது, அதன் 1,053 கிலோமீட்டர் நீள கடற்கரையில் 32% பரப்பானது தீவிரமாக அரிக்கப்பட்டு வருவதுடன் கடுமையான கடலோர அரிப்பை எதிர்கொள்கிறது.
- சுற்றுச்சூழல், வனம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது புயல் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்களைக் குறைப்பதற்காக வேண்டி மாபெரும் பசுமைச் சுவர் முன்னெடுப்பு /கிரேட் கிரீன் வால் (GGW) திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- ஐந்து கிலோமீட்டர் பரப்பளவில் நிறுவப்பட உள்ள இந்த GGW, சதுப்புநிலங்கள், காற்றுத் தடைத் தோட்டங்கள், நிலப்பரப்புத் தாவரங்கள் மற்றும் மணல் திட்டுகளைக் கொண்டிருக்கும்.
- இது பல்லுயிர்ப்பெருக்கம், பருவநிலை மீள்தன்மை மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் அதே வேளையில் மூன்று மில்லியனுக்கும் அதிகமான கடலோர குடியிருப்பாளர்களைப் பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கிருஷ்ணா மற்றும் கோதாவரி கழிமுகங்கள் போன்ற பாதிக்கப்படக் கூடிய பகுதிகளை இலக்காகக் கொண்டு 100,000 ஹெக்டேர் அளவிலான பசுமைப் பரப்பினை மீட்டெடுக்க இந்தத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

### வாகனங்களுக்குப் பசுமை வரி

- உத்தரகாண்ட் அரசானது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் பிற மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களுக்குப் பசுமை வரியை அமல்படுத்த உள்ளது.
- தானியங்கி எண் தகடு அடையாள அங்கீகாரம் (ANPR) அமைப்பின் ஒளிப்படக் கருவிகள் எல்லை சோதனைச் சாவடிகளில் வாகன நுழைவை கண்காணிக்கும்.
- போக்குவரத்து மாசுபாட்டைக் குறைத்தல், இமயமலை சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மாநிலத்தில் தூய்மையை மேம்படுத்துதல் ஆகியவை இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.
- பசுமை வரி விதிக்கும் பிற இந்திய மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை அடங்கும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### K. மாதங்கி இராமகிருஷ்ணன் மறைவு

- தென்னிந்தியாவில் புகழ்பெற்ற ஒட்டுறுப்பு மற்றும் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை நிபுணரும் தீக்காய சிகிச்சையில் முன்னோடியுமான டாக்டர் K. மாதங்கி இராம கிருஷ்ணன் சென்னையில் காலமானார்.
- இவர் சென்னை அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் ஒட்டுறுப்பு அறுவை

சிகிச்சை துறை மற்றும் தீக்காயப் பிரிவை நிறுவினார்.

- மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இந்தியா முழுவதும் பரவலாக ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒரு நுட்பமான தீக்காயங்களுக்கான உயிரணு மென் சவ்வு / கொலாஜன் நுட்பத்தினை அவர் உருவாக்கினார்.
- டாக்டர் மாதங்கி 2002 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ, டாக்டர் B.C ராய் தேசிய விருது, 2014 ஆம் ஆண்டில் ஔவையார் விருது மற்றும் 2009 ஆம் ஆண்டில் G. விட்டேக்கர் சர்வதேச பர்ன்ஸ் பரிசு உட்பட பல விருதுகளைப் பெற்றார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★